**செய்தி வெளியீடு எண்: 75** **நாள்: 29.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

வளர்ந்து வரும் நகர்ப்புற மக்கட்தொகை மற்றும் தொடர்புடைய வணிக நடவடிக்கைகளுக்கு ஏற்ப நகரக் கட்டமைப்புகளை அதிகப்படுத்துவதிலும், மேம்படுத்துவதிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள தொலை நோக்குத் திட்டம் 2023-ல், தமிழகத்திலுள்ள 10 நகரங்கள் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் உரிய அழுத்தத்துடன் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தங்கு தடையின்றி 24 மணி நேரமும் வழங்குதல், திறந்த வெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாத மற்றும் குப்பை கூளங்கள் இல்லாத பாதுகாப்பான சுகாதாரமான சூழ்நிலையை உறுதி செய்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்துடன், தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியம் மூலமாகவும், உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மனிய நாட்டு நிதி நிறுவனமான KfW போன்ற அமைப்புகள் மூலம் நிதியுதவி அளித்து வருகிறது.

ஏற்கெனவே KfW நிதி நிறுவனத்திடமிருந்து நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு திட்டத்தின் கீழ் 500 கோடி திட்ட மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் திட்டங்கள், மற்றும் பல்வேறு நகர்ப்புற திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, தற்பொழுது இந்த நிறுவனத்திடமிருந்து, உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு பணிகளை நிறைவேற்ற, நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதியுதவி திட்டம்-II என்ற திட்டத்தின் கீழ் மேலும் 520 கோடி ரூபாய் நிதி உதவி பெற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி, இந்த நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசு மற்றும் TNUDF நிறுவனத்திற்கு இடையே உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின்படி, 30.06.2018 வரையிலான திட்ட காலத்திற்குள் குடிநீர் மேம்பாடு, பாதாள சாக்கடைத் திட்டம், சாலை வசதி மற்றும் நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மேம்படவும், உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள் மேலும் மேன்மை அடைவதற்கும் வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு: -இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 29.1.2013.